2. தகவல் கோரல்.

(அ) கண்ணகி கோயில் விழாவின்போது கேரள அரசின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பும் எண்ணூரில் உள்ள காசி விசுவநாதர் கோயில் புயலால் சேதம் அடைந்துள்ளது குறித்தும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகியினுடைய கோயிலில் விழா நடத்த வேண்டும் என்று, அந்த விழாவுக்காக ஏற்பாடு செய்து இருக்கிற விழாக் குழு சார்பில் நீண்ட நாட்களுக்கு முன்னால் நம்முடைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, நம்முடைய அரசின் சார்பில் கேரள அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்த விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால் விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால் விழாக் குழுவினர் ஏற்பாடு செய்தபடி கண்ணகிக்கு விழா எடுக்கின்ற நிலையில் 3 நாட்கள் அந்த விழாவை ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். முதல் நாள் கண்ணகிக்கு விழா என்றும், இரண்டாவது நாள் சித்திரை முழு நிலவு விழா என்றும், மூன்றாவது நாள் மாரி விழா என்றும்—இப்படி மூன்று விழாக்களை 3 நாட்களுக்கு அமைத்து அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து ஆயிரக் கணக்கான மக்கள் கூடுகின்ற வாய்ப்பை உருவாக்கி இருக்கின்றார்கள். ஆனால் ஏற்பட்டு இருக்கிற நிலை என்னவென்றால், கேரள அரசின் சார்பில் பல கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விளைவாக அங்கே, தமிழ் நாட்டிலே இருந்து தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பேனர்கள் கூடக் கட்டக் கூடாத அளவுக்கு நிலைமைகளை அங்கே இருக்கிற காவல் துறையினர் உண்டாக்கி இருக்கிறார்கள்.

10-05 மணி

நான் இங்கே மாண்புமிகு முதல்வரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். இந்தக் கண்ணகி கோயிலைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சுற்றுலா மையமாக இருக்கிற தேக்கடிக்கு மிகமிக அருகிலே இருக்கிற காரணத்தாலே நாம் இந்தக் கண்ணகி கோயிலை எந்த அளவுக்கு நம்முடைய அரசு சார்பில் விரிவு படுத்தி, பெருமைப்படுத்துகிற நிலையை உண்டாக்குகிறோமோ அந்த அளவிற்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற ஒரு வாய்ப்பு நமக்கு உருவாகும். தேக்கடிக்கு அருகிலே இருக்கிற காரணத்தாலே ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான அயல் நாட்டினர் தேக்கடிக்கு வந்து போகிறார்கள். இந்தத் தேக்கடிக்கு வருகிறவர்கள் இப்படிப்பட்ட ஒரு கோயில் கண்ணகிக்கு இருக்கிறது என்பதும், கண்ணகியினுடைய பெருமைகளை நிலை நாட்டுகின்ற வகையில் அவர்களுக்கு எடுத்துக் கூறப்படுமானால் சுற்றுலா வருபவர்கள் அதைப் பார்க்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்குவதற்கு நமக்கு வசதி இருக்கிறது.

1990 மே 11] [திரு. எஸ். ஆர். இராதா]

இன்னொன்று, இந்தக் கோயிலுக்குக் கேரளாவிலேயிருந்து, தேக்கடியிலேயிருந்து போக வேண்டுமென்று நிலை இருந்தாலும் கூட, நம்முடைய அந்தப் பகுதியிலே இருக்கிற இந்த விழா நடத்துகிற கூடல் ராமசாமி அவர்களும், அந்தப் பகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் கோபால் அவர்களும் தமிழ்நாட்டினுடைய மலைப் பகுதியிலே கூட ஒரு வழியை உருவாக்கிக் கொள்ளலாம் என்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே கூட நாம் நடவடிக்கை எடுத்து அந்தக் கோயிலினுடைய சிறப்பை நாம் பெருமைப்படுத்துவதன் மூலமாக இன்னும் பல்வேறு வகையில் நாம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது.

அதே நேரத்தில் கண்ணகிக்கு எடுக்கின்ற அந்த விழாவை மிகப் பெரிய விழாவாக எடுக்கின்ற அந்த வாய்ப்பு இருக்கிறது. எனவே, அரசின் சார்பில் மூன்று நாட்கள் அனுமதிக்கப்பட வேண்டிய அந்த விழாவிற்கு ஒரேயொரு நாள் மட்டும் கேரள அரசு அனுமதித்து, அதற்குப் பின்னால் இரண்டு நாட்கள் அனுமதி கிடையாது என்று சொல்லி, பல்வேறு வகையிலே நெருக்கடிகளை உண்டாக்கி, இடர்ப்பாடுகளை உண்டாக்கியிருக்கிறார்கள். அதை நம்முடைய அரசு கவனத்திலே கொண்டு அதைத் தீர்ப்பதற்கான, போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைகளை நாம் மேற்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை என்ற வகையில் நான் மாண்புமிகு முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக, இப்படிப்பட்ட பழம் பெருமை வாய்ந்த கோயில்கள் என்று சொல்கிற நேரத்தில் அதைக் காக்க வேண்டியது நம்முடைய கடமை என்ற முறையில் நான் இங்கே வற்புறுத்திக் கூறுவேன். நேற்று முன்தினம்கூட எண்ணூர் ஹைரோடிலே இருக்கிற காசி விஸ்வநாதர் ஆலயம் கடலரிப்பாலே பாதிக்கப்பட்டது. இந்தப் பாதிப்பை முன்னாலேயே நாம் கவனித்திருந்தால் அந்தக் கோயிலைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால் என்ன காரணத்தினாலோ அந்தக் கோயில் பாதி கடலுக்குப் போய்விட்டது. என்றாலும் இப்படிப்பட்ட கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் இவை பழங்காலத்துக் கோயில்கள். புதிய புதிய கோயில்கள் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இந்தப் பழைய கோயில்களையாவது காப்பாற்றி இதிலேயிருந்து பழங்கால நம்முடைய பெருமைகளை எடுத்துச் சொல்கிற ஒரு வாய்ப்பையாவது உருவாக்கிக் கொள்ளலாம்.

நான் இன்னொன்றையும் இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். நேற்றைய தினம் மத்திய அரசு மனமுவந்து நம்முடைய புயல் பாதிப்புக்காக 35 கோடி ரூபாய்க்கு நமக்கு அனுமதி கொடுத்து இருப்பதாக ஒரு செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில், பல்வேறு இடங்களிலே பாதிப்புகள்

ஏற்பட்டிருக்கின்றன. செய்யூர், மாக்காளம் போன்ற இடங்களிலே உப்பளங்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட பாதிப்புகளில் இந்த எண்ணூர் கோயில் போன்ற —காசி விஸ்வநாதர் கோயில் போன்ற இந்த நிலைகளையும் இந்தப் பாதிப்புகளோடு கவனித்து அரசு இப்படிப்பட்ட பழங் காலப் பெருமைகளைச் சொல்கிற இவைகளைக் காப்பாற்ற வேண்டும்.

கேரள அரசோடு கொஞ்சம் கனிவோடும், அதே நேரத்தில் கொஞ்சம் கண்டிப்பாகவும் சொல்லி, இந்தக் கண்ணகி விழாவை மூன்று நாட்கள் நடத்துவதற்கு அனுமதிப்பதோடு, தொடர்ந்து நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் கோயிலுக்குச் சென்று வந்து, அங்கே வழிபடுவதற்கும், கண்ணகியினுடைய பெருமையைக் காப்பாற்றுவதற்கும் வழி செய்ய வேண்டுமென்று, ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினமே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இதுகுறித்து ஒரு குறிப்பினை இங்கே எழுப்புவதற்கும், அதற்கான விளக்கம் நான் தர வேண்டுமென்றும் கூறியதற்கிணங்க சில தகவல்களைக் கேரள அரசின் அதிகாரிகளிடமிருந்து நான் பெற்றுள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார், நம்முடைய பழம் பெரும் சின்னங்கள், வரலாறுகள், இவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஒரு நிலையை. அதே அக்கறையோடுதான் இந்த அரசு கண்ணகிக்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலும், கண்ணகியை மையமாக வைத்து எழுந்த சிலப்பதிகாரத்திற்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலும் பூம்புகாரையே உருவாக்கியிருக்கிறது.

10-10மணி

அதைப்போலவே நம்முடைய பழம் பெருமை, நம்முடைய பண்பாடு இவைகளைக் காக்கின்ற வகையில் வள்ளுவர் கோட்டம் நிர்மாணிக்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுப் பெருமை, விடுதலை வரலாறு, அதிலே முதல் தளநாயகனாக இருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரனுக்கு, கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அண்மையில் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல வள்ளுவருக்குக் குமரி முனையில் சிலையெடுக்கவும், ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, நம்முடைய பழம் பெருமையைக் காப்பது என்பதில் இந்த அரசைப் பொறுத்தவரையில் இருவேறு கருத்துகளுக்கு இடமே இல்லை. அவர்கள், காசி விசுவநாதர் கோயில்,

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு இந்த அரசால் எடுக்கபபடாத காரணத்தால், இந்த மழையில் இரண்டாகப் பிளந்து விட்டது, ஒரு பழைய சின்னம் இப்படி பாதிக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். காசி விசுவநாதர் கோயில் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது அல்ல. அது நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு ஆலயம்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைச் சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அரசு என்று தான் குறிப்பிட்டேனே தவிர, இந்த அரசு, அந்த அரசு என்று குறிப்பிடவில்லை. பொதுவாக அரசு என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த அரசு என்று குறிப்பிடாமலே அந்த அரசைச் சுட்டிக் காட்டியதற்கு நன்றி. எனவே, கண்ணகி கோயிலைப் பொறுத்த வரையில் எனக்கு வந்துள்ள தகவல்—கூடலூர் இராமசாமி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றியெல்லாம் சொன்னார்கள். அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டி அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே, இந்த அவையில் இதுகுறித்துப் பிரச்சினை எழுந்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரும், நானும் ஏற்ற விளக்கங்களை எல்லாம் இங்கே தந்திருக்கிறோம். இதற்கிடையில் கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் கசப்புணர்வு ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். நானும் கேரள முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதாக இருக்கிறேன் என்றெல்லாம் அன்றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால், அங்கே இந்தத் திருவிழாவை ஒட்டி, அந்தக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடும்போது, அங்கே ஒட்டப்பட்ட சுவரொட்டியில் கூடலூரில் உள்ள கண்ணகி ஆலயம் என்று எழுதி ஒட்டப்பட்ட காரணத்தால், அதைக் கேரள அரசின் சார்பாக மறுத்து இருப்பதாகத் தான் எனக்கு தகவல் வந்தது. அந்தக் கூற்று எவ்வளவு சரியானது என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், இதுபோன்ற மிக உணர்ச்சிகரமான பிரச்சினைகளில் நாம் கசப்புணர்வை இன்னொரு மாநிலத்திற்கு இடையே உருவாக்கக்கூடாது என்ற அடிப்படையில் தான் இதைக் கூறுகிறேனே அல்லாமல் வேறு அல்ல.

7–5–1990 அன்று இந்த அவையிலே கண்ணகி கோயில் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டு, கேரள அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களோடு பேசி அந்த அடிப்படையில் கண்ணகி கோட்டத்திற்கு, விழாவிற்குச் செல்பவர்களுக்குத் தடை இல்லாமல் பார்த்துக் கொள்வதாகக் கேரள அரசினுடைய செயலாளர் அவர்கள் நம்முடைய செயலாளருக்கு உறுதி அளித்தார்கள். இந்த 3 நாள் விழாவிற்கு துணை செய்ய கேரள

அரசைக் கேட்டிருக்க வேண்டும் என்ற வாதம் இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. அதைக் குறித்து, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் குறிப்பைத் தந்தவுடன், நேற்று மீண்டும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு இதுபற்றிப் பேசப்பட்டது. கேரள அரசு இந்தப் பிரச்சினை குறித்து இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் உடனடியாக அறிக்கை கேட்டு மேற்கொண்டு ஆவன செய்வதாகத் தெரிவித்தது. அதற்கிடையில், நம்முடைய அரசின் பொதுத் துறைச் செயலாளர் தொலைபேசி மூலமாக நேரடியாக இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு பேசினார்.

கண்ணகி கோயில் விழா என்பது ஆண்டிற்கு ஒரு நாள் மட்டுமே, அதாவது சித்திரை முழு நிலவு அன்று கொண்டாடப் படுகிறது என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்து இருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும் இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவரோடு பேசி இருக்கிறார். அப்போது இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழ் மொழி தெரிந்த அர்ச்சகரை அமர்த்தி, தேவையான வழிபாடுகளைச் செய்யவும், குடிநீர் தேவைப்பட்ட அளவிற்கு வருகிற பக்தர்களுக்கு விநியோகம் செய்யவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், எந்தவிதமான புகாருக்கும் இடம் இல்லாமல் அனைத்து வசதிகளும் விழாவிற்கு வருகிற பக்தர்களுக்குச் செய்து கொடுப்பதாகவும் இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லி இருக்கிறார்.

பொதுவாகத் தமிழகத்திலிருந்து செல்கிற மக்கள் இந்த விழாவை 3 நாட்கள் தொடர்ந்து கொண்டாட வேண்டுமென்று விரும்பினாலும், கேரள மாநில அரசு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இந்த விழா ஒரு நாள் மட்டும் எடுக்கப்பட இயலும் என்றும், ஏனென்றால் பல ஆண்டுகளாக இந்த முறைதான் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது என்றும், பக்கத்தில் சிறுத்தைப் புலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்பதால் இரவில் தங்குவது என்பது அவ்வளவு நல்லதல்ல என்று கருதப்படுவதாலும் 3 நாட்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது தங்களுக்கு மிகுந்த சிரமம் என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

10-15 மணி

அதிலே அங்கே மூன்று நாட்கள் விழா நடக்குமேயானால், அங்கே பூஜை செய்கின்ற காரியங்களைச் செய்யக் கூடியவர்களுக்கு அதிக வருமானம் கூட கிடைக்கக்கூடும் என்ற அடிப்படையில்கூட இதுபோன்ற வேண்டுகோள்களை அந்த விழாவினையொட்டிதிரும்பத் திரும்ப எழுப்பி வருவதாகவும் ஒரு தகவல் கூறப் பட்டு இருக்கிறது. எனினும் எந்த வகையிலே பார்த்தாலும், உணர்ச்சியோடு பின்னிக் கிடக்கின்ற ஒரு சம்பவம் இது. இந்தப்

1990 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

பிரச்சினையில் நாம் நம்முடைய அணுகுமுறையை—எதிர்க் கட்சித் தலைவரே குறிப்பிட்டதைப் போல கனிவோடும் துணிவோடும் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, கனிவோடு பேசி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, கண்ணகி ஆலயம் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே இருக்குமாறு செய்ய எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அந்தப் பிரச்சினை தீருமானால், இதுபோன்ற திருவிழாப் பிரச்சினைகள் வருவதற்கே இடம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேரன்மாதேவித் தொகுதியில் பொட்டல் கிராமத்தில் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப் பெறாதது குறித்தும் சில இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதியில் கள்ளிடைக்குறிச்சிக்கு அருகே உள்ள பொட்டல் கிராமத்தில் சுமார் 400 மக்களுக்கு ரேஷன் கார்டுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அதற்கடுத்தாற்போல, பாப்பாகுடி யூனியனில் பனையங்குறிச்சி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ரேஷன் கடைகிடையாது. அங்கேயிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இடைகால் என்ற ஊருக்குப் போய்த்தான் மக்கள் இன்றைக்கு ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் போய்க் கேட்பதற்குள் பொருட்கள் தீர்ந்துவிடுகின்றன. அதேபோல் பாப்பாகுடி யூனியனில் புதுப்பட்டி அருகே உள்ள காசிநாதபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இவர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத்திற்குப் போய் பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

கடயம் யூனியனில் தெற்கு மடத்தூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த புங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரேஷன் கடை இல்லை. 5 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி கள்ளிடைக்குறிச்சி கிராமம், பொட்டல் உட்கடை கிராமத்தில் இதுவரையில், 3–5–1990 வரையில், 134 பேர்கள் தங்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார்கள். அது உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு வெகு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.